பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

Amc

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 13 புதன்கிழமை (26-05-1993) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 179

# தீவிரவாதத் தொடர்புடையவர்கள் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளனர்

## கூட்டுப்படை தலைமையகம் மக்களை எச்சரிக்கிறது

கொழும்பு, மே 26

தீவிரவாதத் தொடர்புடையவர்கள் சிலர் வடக்கு, கிழக்கிலிருந்து கொழும்பிலும் அதை அண்மித்த பகுதிகளிலும் வந்து தங்கியுள்ளனர். இத்தகைய நபர்கள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா கூட்டுப் படைகள் தலைமையகம் இவ்வாறு எச்சரித்திருக்கிறது.

கூட்டுப்படைத் தலைமையகம் இது தொடர்பாக நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

சந்தேகத்துக்கு இடமற்ற முறையில் மக்கள் மத்தியில் பழகும் தீவிரவாத நபர்கள் பற்றி மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தீவிரவாத சந்தேகநபர்கள் சந்தேகத்துக்கு இடமற்ற முறையில் மக்கள் வாழும் இடங்களில் அல்லது வேலைத் தலங்களில் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கு சாதகமான சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து உள்ளனர்.

அப்படிப்பட்டவர்களைக் கண்டு பிடித்து அவர்களினால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களைத் தடுப்பது பெரும்பாலும் பொதுமக்கள் அளிக்கும் ஒத்துழைப்பில் தான் தங்கி உள்ளது.

பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் பொதுமக்களின் ஒத்துழைப்பினால் தான் அவ்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் அத்தியாவசிய சேவை கொழும்பில் பணிகள் மந்தம்

யாழ்ப்பாணம், மே 26

கொழும்பில் அரசாங்க உயர் மட்டங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களினால் வடபகுதிக்கான அத்தியாவசிய சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

வடக்கில் ஓரளவேனும் அத்தியாவசிய சேவைகளைப் பேணும் வகையில் இடம் பெற்று வந்த நடவடிக்கைகள் இப்போது மந்த நிலை அடைந்துள்ளதாக அவற்றுடன் தொடர்புடைய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

வடபகுதிக்கான அத்தியாவசிய சேவைகளுக்குரிய அலுவல்களைக் கையாளும் அத்தியாவசிய சேவைகள் திணைக்களம், புனர்வாழ்வு அமைச்சு, கூட்டுப்படைத் தலைமையகம் ஆகிய பகுதிகளில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் பலர் இடமாற்றப்பட்டுள்ளனர். இன்னும் பலர் இடமாற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகையால் இந்தப் பகுதிகளில் நிரந்தரத் தன்மை ஏற்படவில்லை. அதனால் இப் பகுதிகளில் பணிகள் இன்னும் சீராக நடக்கத் தொடங்கவில்லை. அரசாங்க இயந்திரம் ஒழுங்கு முறையாக இயங்கவில்லை.

மேலும் வடக்குக்குரிய அத்தியாவசிய சேவைகள் சம்பந்தமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளுடன் கலந்து பேசும் அரசின் பிரதிநிதியான திரு. பிரட்மன் வீரக்கோனும் பதவி மாற்றம் செய்யப்படுவதால் —

அத்தியாவசிய சேவைகள் குறித்த அரசின் அடுத்த திட்டம் என்ன என்று அறியமுடியாத நிலை உருவாகி உள்ளதாம்.

இவை எல்லாவற்றினதும் விளைவாக யாழ். குடாநாட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடல் மோதலில் 3 புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 26

கிளாலிக் கடற்பகுதியில் நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

கப்டன் ஷாஜகான் (லூர்த்து சேவியர் சீலன் — மணற்காடு), லெப்டினன்ட் மணியரசன் அல்லது தங்கனன் (பொன்னம்பலம் ரவீந்திரன் — சுப்பர்மடம்), லெப்டினன்ட் சேகர் (காளிமுத்து மனோகரன் — கிளிநொச்சி) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர்.

## இலங்கைக்கு உதவும் நாடுகள் கூட்டம் ஜூன் மாதம் பாரிஸில்

கொழும்பு, மே 26

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் பாரிஸில் அடுத்தமாதம் கூடவிருக்கின்றது.

இலங்கைக்கு அடுத்த ஆண்டில் வழங்கவிருக்கும் நிதி உதவிகள் பற்றி மேற்கு நாடுகளும் மற்றும் நிதி உதவி வழங்கும் ஏஜன்ஸிகளும் இக் கூட்டத்தில் அறிவிக்கவுள்ளன.

இதற்கு முன்னோடியாக, இலங்கைக்கு உதவும் நாடுகளின் ராஜதந்திரிகளை கொழும்பு அரசு மாநாடு ஒன்றுக்கு அழைத்து, இலங்கை அரசின் பொருளாதாரத் திட்டம் மற்றும் மனித உரிமை நிலைவரம் பற்றி அவர்களுக்கு விளக்கமளிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில், மனித உரிமை பேணல் பற்றி ஐ. நா. மனித உரிமை [illegible] வுக்கு இலங்கை அரசு அளித்துள்ள உறுதிமொழிகள் அமுல் செய்யப்படுகின்றதா என்பதையும் நாட்டில் மனித உரிமை நிலைவரம் எப்படி உள்ளது என்பதையும் உதவும் நாடுகளின் ராஜதந்திரிகள் மீளாய்வு செய்யத் தொடங்கியுள்ளனர் என்று ராஜதந்திர வட்டாரங்கள் கூறின.

அவசரகாலச் சட்ட விதிகளைத் தளர்த்துவது மற்றும் மனித உரிமை மீறலில் [illegible] பாதுகாப்புப் படை[illegible] மீது நடவடிக்கை எடுக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## "ஜே.ஆர். காலமாகிவிட்டார்!" கொழும்பில் பரவிய வதந்தி

கொழும்பு, மே 26

கொழும்பு மாநகரில் கடந்த வாரம் ஒரு வதந்தி பரவியது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா காலமாகிவிட்டார் என்பதே அந்த வதந்தியாகும்.

வதந்தி உண்மையானது என்பதை உறுதிப்படுத்த துணிச்சலான இளைஞர் ஒருவர் வார்ட்பிளேஸில் உள்ள ஜே. ஆரின் இல்லத்துக்கு தொலைபேசி எடுத்தார்.

"இளைஞனே! நான் சாகவில்லை. இந்தத் தொலைபேசி மூலம் அடுத்த 20 வருடங்களுக்கும் நானே பதிலளிப்பேன் என்பதைச் சொல்லிவைக்க விரும்புகின்றேன்" — என்று ஜெயவர்த்தனா பதிலளித்தாராம்.

(ஓ-எ)

## பேச்சுகளை முன்னெடுக்கும் வாய்ப்புகள் உள்ளன

### ஆயர் கென்னத் தகவல்

கொழும்பு, மே 26

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இப்பொழுது ஏற்பட்டிருப்பதாக அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

கொழும்புத் தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு அவர் பின்வருமாறு கருத்து வெளியிட்டிருந்தார்:-

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிக்கு வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாண மக்களின் கருத்துக்கள் ஊக்கம் தருகின்றன.

தீவிரவாதப் பிரச்சினைகளுக்கு தீர்க்கமான முடிவு காண்பதற்குரிய பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இப்பொழுது ஏற்பட்டுள்ளன.

புதிய ஜனாதிபதியின் வேண்டுகோளை ஏற்பதோடு, அதை முன்னெடுத்துச் சென்று சுமுக தீர்வுக்கான பேச்சுவார்த்தையைத் தொடரவும் நான் ஆயத்தமாக இருக்கின்றேன்— என்று அவர் தெரிவித்தார். (அ-எ)

## ரூபவாஹினி, வானொலி தலைவர்களும் மாற்றம்

கொழும்பு, மே 26

ரூபவாஹினி மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் ஆகியவற்றின் தலைவர்களை மாற்றும்படி தகவல் துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்

பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த போது இத்தகைய மாற்றங்கள், நீக்கங்கள், மற்றும் புதிய நியமனங்களை அவரே நேரடியாகச் செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இத்தகைய விடயங்களில் அமைச்சர்கள் மட்டத்திற்கு அதிகாரங்களைப் பன்முகப்படுத்தி உள்ளார் என்பது தெரிந்ததே.

### அராலிக் கண்ணிவெடி;

## ஆணைக்குழு விசாரணை இன்று ஆரம்பமாகுகின்றது

கொழும்பு, மே 26

லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் இராணுவ உயரதிகாரிகளைப் பலி கொண்ட அராலித்துறை கண்ணிவெடிச் சம்பவம் தொடர்பான தனது விசாரணையை பொது நல அமைப்பு நாடுகளின் மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆணைக்குழு இன்று ஆரம்பிக்கிறது.

பொதுமக்களிடமிருந்து

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மோட்டார் ஊர்திப் பதிவு சம்பந்தமாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 26

மோட்டார் ஊர்திகள் வைத்திருப்பவர்களின் கவனத்துக்கென விடுதலைப் புலிகள் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

முதல் கட்டமாக யாழ். உ. அ. அதிபர் பிரிவிலும், இரண்டாம் கட்டமாக நல்லூர் உ. அ. அதிபர் பிரிவிலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஸ்ரீலங்காவால் வழங்கப்பட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் களஞ்சியம் வெறுமனே உள்ளது!

யாழ்ப்பாணம், மே 26

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியம் தற்சமயம் வெறுமையான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து வாகன அணி மூலம் குடாநாட்டுக்குள் பொருள்கள் எடுத்து வரும் முயற்சியைச் செயற்படுத்துவதற்காக இரண்டாரயிம் மெற்றிக்தொன் உணவுப்பொருள்கள் காங்கேசன்துறை களஞ்சியத்தில்களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

வாகன அணி மூலம் உணவுப் பொருள்களைக் குடாநாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையைச் செயற்படுத்துவது குறித்து விடுதலைப் புலிகளுடனும், ஸ்ரீலங்கா அரசு மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுடனும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

எனினும் இம் முயற்சியை செயற்படுத்துவது காலதாமதமாகி வருகிறது.

இந் நிலையில் —

காங்கேசன் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களில் பெரும் பகுதி தீவுப்பகுதிக்கு ''மெரினால்'' கப்பல் மூலம் அனுப்பப்பட்டதாகவும் —

மீதியாக இருந்த 840 மெற்றிக் தொன் மா கடந்த வாரம் ''மெரினால்'' மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டதை அடுத்து களஞ்சியம் தற்போது வெறுமையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது, [உ-3]

## இலங்கைக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும் என்று கொழும்பு அரசு அளித்த உறுதி மொழிகள் அமுல் செய்யப்படுகின்றதா என்பது குறித்தே உதவும் நாடுகளின் ரா[illegible]ந்திரிகள் கூடுதல் அக்கறை [illegible]லுத்துவார்கள் என்று ராஜதந்திர வட்டாரங்கள் கூறின. (ஒ-எ)


COUNCIL OF NGOO, JAFFNA.

வலதுகுறைந்தோர் புனர்வாழ்வுக்கான வழிமுறைகளை இனங்காண்பதற்கான

**ஆய்வுப்பட்டறை**

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள மேற்படி ஆய்வுப்பட்டறையில் கலந்து கொள்ள விரும்பும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களின் பெயர் விவரங்களுடன் இணைய பணிமனையில் உள்ள படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து 31-05-93க்கு முன் எமக்கு அனுப்பிவைக்கவும்.

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்;

100. இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (சி/5164)



திருமறைக் கலாமன்ற
கவின் கலைகள் பயிலக
சித்திரப் பகுதி
நடத்தும்

**சித்திரக் கண்காட்சி**

மேற்படி சித்திரக் கண்காட்சியை 28-5-93 வெள்ளி காலை 10 மணிக்கு உயர்திரு. வை. சிவசுப்பிரமணியம் (ரமணி) உதவிக் கல்விப் பணிப்பாளர் [சித்திரம்] தொடக்கி வைப்பார்.

காட்சிகள் இரு தினங்கள் வைகாசி (1993) 28, 29 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

(சி-5165)



**கவின் கலைகள் பயிலகம்**
School of Fine Arts
வழங்கும்

**மாதாந்த நிகழ்ச்சி**

திருமதி வசந்தி குஞ்சிதபாதம்
அவர்களின்
பரத கலா கேந்திர மாணவர்
அளிக்கும்

**பரத நாட்டியம்**

காலம்: 26 05 93 (புதன்கிழமை) மாலை 6.45 மணி
இடம்: மன்ற அரங்கு
பிரவேசம்: இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [சி-5166]


## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 26

எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெற விருந்த பொது எழுதுவினைஞர் சேவையின் மூப்பு அடிப்படையில் அதிசிறப்பு வகுப்புக்கு பதவி உயர்வு செய்வதற்கான போட்டிப்பரீட்சை பரீட்சை ஆணையாளரினால் பிற்போடப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற வேண்டிய மறு திகதியை யாழ். அரச அதிபருடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கும் படி கேட்கப்பட்டிருக்கின்றனர். (உ-16)

## ஆலயங்களில்

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலை கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 26 தினங்கள் உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 18 ஆம் திகதி ரதோற்சவமும் இறுதி நாளான 20 ஆம் திகதி திருக்கல்யாணமும் நடைபெறும். (ஓ-11)

o o o

வடவரணி கும்பிட்டான் கற்பகப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. பத்து நாட்கள் உற்சவம் நடைபெற்று எதிர்வரும் பூரணை தினத்திற்கு முதல் நாள் தேர்த்திருவிழா நடைபெறும். (ஓ)

o o o

பொலிகண்டி இருப்பை மூலை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 2 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், மறுநாள் ரதோற்சவமும் நடைபெறும். (ஓ)

o o o

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். ஜூன் மாதம் 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [த-117]

o o o

ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று மாலை 5-30 மணிக்கு சேக்கிழார் குருபூசை நடைபெறும். [த-45]

o o o

மீசாலை வடக்கு தட்டான்குளம் அருள்மிகு திருநீலகண்டப் பிள்ளையார் கோவில் மணவாளக் கோலத் திருவிழா இன்று காலை 8 மணிக்கு மகா சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். [த]

## பாடசாலைகளில்

இருபாலை சீ. சீ. த. க. பாடசாலைக்கான விளையாட்டு மைதானம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்துவைக்கப்படும். அதன் பின்னர் அந்த பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இடம்பெறும்.

இந் நிகழ்ச்சிகள் பாடசாலை அதிபர் திரு. ஐ. வேலாயுதர் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வைத்திய கலாநிதி திரு. வ. தியாகராசா மைதானத்தைத் திறந்து வைப்பார். (ஓ)

o o o

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும்.

o o o

அச்சுவேலி தெற்கு கஜமுகன் [illegible] விளையாட்டுப்போட்டி இன்று அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெறும். (ஓ-111)

பிரேமாவின் திட்டமான

# ஆடைத் தொழிற்சாலைகள் எதிர்காலம் கேள்விக்குறி

கொழும்பு, மே 26

பல ஊகங்களின் மத்தியில் 200 ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைத் திட்டத்தின் எதிர்காலம் நிச்சயமற்ற தன்மையாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

முதலீட்டுச் சபையினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலைகள் மட்டுமே இனி ஆரம்பிக்க அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

120 தொழிற்சாலைகள் தற்போது செயல்படுகின்றன. இந்த ஆண்டின் இறுதிக்குள் மேலும் 30 தொழிற்சாலைகள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளன என்று முன்னணி ஆடை தயாரிப்பு தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் சொன்னார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா வகுத்த 200 ஆடை தொழிற்சாலைத் திட்டத்துக்கு இணங்க, எஞ்சிய 50 தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்படாமல் போகலாம் என்றும் அவர் கூறினார்.

ஆடைத் தொழிற்சாலைகளை அளவுக்கு அதிகமாக நிறுவுவதும் ஏற்றுமதிச் சந்தையில் உள்ள கோட்டா முறையை வெகுவாகப் பாதிக்கும் என்றும், லாபத்தைக் குறைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அனுமதி வழங்கப்பட்ட தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவற்றை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்றும் முதலீட்டுச் சபைத் தலைவர் லக்ஷ்மன் வட்டவல தெரிவித்தார். (ஒ-எ)

# ஆடைதொழிற்சாலைஊழல்: விசாரிக்க ஆணைக்குழு

கொழும்பு, மே 26

இருநூறு ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டத்தின் பேரால் துணிகளை இறக்குமதி செய்ததிலும், ஆடைகளை ஏற்றுமதி செய்ததிலும் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகளைக் கண்டுபிடிப்பதற்காக விசாரணை ஆணைக்குழு ஒன்று விரைவில் நியமிக்கப்படவுள்ளது.

உயர் அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும் முதலீட்டுச்சபை அதிகாரிகளுக்கும் இடையே அண்மையில் இடம்பெற்றன.

நடந்து முடிந்த மோசடிச் செயல்களை விசாரிப்பதுடன் ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைத் திட்டத்தின் பேரால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ஏற்றுமதி, இறக்குமதிகளையும் இந்த ஆணைக்குழு கண்காணிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆடைத் தொழிற்சாலைக்கு என இறக்குமதி செய்யப்படும் துணிகள், ஆடைகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படாமல், கள்ளச் சந்தையில் விற்கப்பட்டு வருவதாகவும்—

இத்தொழிற்சாலைகளில் பணிபுரிவோருக்கு அவர்கள் வேலை செய்யாமலே சம்பளம் வழங்கப்படுவதாகவும்—

கள்ளச்சந்தை வியாபாரம் மூலம் கிடைக்கும் லாபத்தில் இருந்தே சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)


சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
நூற்றாண்டு விழா நிதிக்காக
**கல்லூரி லியோ கழகத்தினர்**
வழங்கும்

**"கலைக் கதம்பம்"**

இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : 26 05 93 புதன் (இன்று)
நேரம் : பிற்பகல் 4 மணி

நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்

அன்பளிப்பு:
ரூபா 10/-, 20/-, 25/-

அனைவரது ஆதரவினையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

[25823]



**உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி**

புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகத்தின்
ஓராண்டு நிறைவையொட்டி
விளையாட்டு அபிவிருத்திக் குழுவில் பதிவு செய்யப்பட்ட
9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில்
வடமாகாண ரீதியில் நடத்தப்படும்
மாபெரும்
உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

விண்ணப்ப முடிவு திகதி 05-06-93

ராஜா வர்த்தகஸ்தாபனம் அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

அன்பளிப்பு

ராஜன் அழகு சாதன அகம்
46, மேற்கு சந்தை,
யாழ்ப்பாணம்.

தீபன் தையல் நிலையம்
46, மேற்கு சந்தை,
யாழ்ப்பாணம்.

(6211)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப் பிரச்சினைக்கு

# அரசியல் தீர்வுத் திட்டம் அடுத்த வருட இறுதியிலாம்

## பிரதமர் ரணில் கூறுகிறார்

அடுத்த வருட இறுதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரசியல் தீர்வுத் திட்டம் தயாராகிவிடும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சி தொடரும் இதேவேளை விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துகின்ற கொள்கையையும் புதிய அரசாங்கம் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

நிலையான சமாதானத்துக்கு அத்தியாவசியமான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றினை அரசாங்கம் எதிர்பார்த்திருக்கிறது என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

# மரக்கறி உற்பத்தியாளருக்கு ம.எண்ணெய் விநியோகம்

வலிகாமம் மேற்கு, மே 26

யாழ். மாவட்டத்தில் மரக்கறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மண்எண்ணெய் விநியோகிக்கப் படவுள்ளது. இதற்கான நடவடிக்கையில் பிரதேச செயலகங்கள் ஈடுபட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் தற்போது பயறு, கௌபீ, குரக்கன் போன்ற உப தானிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பிரதேச செயலகங்களினால் மண்எண்ணெய் கட்டம் கட்டமாக விநியோகிக்கப்படுகின்றது.

அதேபோன்று மரக்கறி பயிர் செய்கைக்கும் மண்எண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளதனால் மரக்கறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அவ்வப் பகுதி கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக மண்எண்ணெய் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ 175)

# இன ஐக்கியமே குறிக்கோள் அதன்படியே செயற்படுவேன்

## சந்திரிகா குமாரணதுங்கா தகவல்

கொழும்பு, மே 26

இன ஐக்கியத்தையே பிரதான குறிக்கோளாகக் கொண்டு செயல்படப் போவதாக மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல். எப். குழு ஒன்று திருமதி சந்திரிகாவை அண்மையில் சந்தித்துப் பேசியது அப்போதே அவர் முன் கண்டவாறு கூறினார்.

பல் இன மக்கள் பின்னிப் பிணைந்து வாழும் மேல் மாகாணத்தை இன ஐக்கியம் தழைத்தோங்கும் மாகாணமாக கட்டி எழுப்புவதே தனது பிரதான குறிக்கோள் என்றும் இதற்காக சமயத் தலைவர்கள், மூத்த தலைவர்கள் ஆகியோரினதும் ஆலோசனைகள் பெறப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

# பிரிட்டிஷ் தூதுவர் பதவி நெல்சபைத் தலைவருக்கு

கொழும்பு, மே 26

நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவர் டி எம். பி. மாரப்பன பிரிட்டனுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படலாம் என்று சொல்லப்படுகின்றது.

இந்த எதிர்பாராத தெரிவு, இப் பதவியைப் பெற முண்டியடித்த பல சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் இலங்கைத் தூதராகப் பணியாற்றிய ஜெனரல் சேபால ஆட்டிகல கடந்த வாரம் கொழும்பு திரும்பி எயர்லங்கா தலைவராகவும் தேசிய பந்தோபஸ்து ஆலோசகராகவும் பதவி ஏற்றார் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

# 27 தமிழ் இளைஞர்கள் கந்தானையில் கைது

கொழும்பு, மே 26

கந்தானையில் 27 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்படுவார்கள் என்று கந்தானை பொலீஸ் அதிகாரி பிரியந்தா ஜயக்கொடி, இ. தொ. கா. பிரதிநிதி திரு. அந்தோனிமுத்துவிடம் உறுதியளித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் அனேகமானோர் வட பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகர்களுக்கு ஓர் எச்சரிக்கை!

# பரிசோதகர் என்ற பெயரில் ஏமாற்றுப் பேர்வழி கைவரிசை

நிறுவை, அளவைகள் பரிசோதகர் என்ற பெயரில் ஏமாற்றுப் பேர்வழி ஒருவர் குடாநாட்டில் நடமாடி வருவதாகத் தெரியவருகிறது.

இந்தப் பேர்வழி வர்த்தகர்கள் பலரை ஏமாற்றிப் பணம் கறந்துள்ளதாக யாழ். செயலக நிறுவை, அளவை பரிசோதகர் பகுதிக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது

இந் நபர் அராலி, சங்கரத்தை, கோண்டாவில், நல்லூர், வட்டுக்கோட்டை, இருபாலை போன்ற இடங்களிலுள்ள வர்த்தகர்களிடம் தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதுவரை முத்திரையிடாது இருக்கும் வர்த்தகர்களை இனங்கண்டு ''உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டால் ஆயிரத்து 500 ரூபா வரை குற்றப்பணம் அறவிடப்படும்'' என அந்தப் பேர்வழி பலரை மிரட்டியுள்ளார் என்றும்—

அவரின் மிரட்டலுக்குப் பணிந்து சிலர் அவரிடம் ஒரு தொகைப் பணத்தை லஞ்சமாகக் கொடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் வர்த்தகர்கள் முன் எச்சரிக்கையுடன் நடந்து உரியவர்களுக்கு உடன் தெரியப்படுத்துமாறு யாழ். செயலக நிறுவை, அளவைகள் பரிசோதகர் பகுதியினர் கேட்டுள்ளனர். (ஒ-162)

# ப. நோ. கூ. சங்க கிளை நவாலியில்

அராலி, மே 26

அராலியில் இருந்து இடம் பெயர்ந்து நவாலியில் தங்கியிருக்கும் மூளாய் மக்களின் நலன்கருதி முகாமுக்கு அருகில் ப.நோ.கூ.சங்கக் கிளை ஒன்று திறக்கப்படவுள்ளது.

இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குள் தங்கியிருக்கும் 365 குடும்பங்கள் இதனால் பயன் பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

# ரஷ்ய டாக்டர்கள் வடக்கு - கிழக்கிற்கு

கொழும்பு, மே 26

வடக்கு - கிழக்கு ஆஸ்பத்திரிகளில் வைத்திய நிபுணர்களுக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ரஷ்ய உதவியை சுகாதார அமைச்சு நாடியுள்ளது.

ரஷ்யாவில் இருந்து 15 வைத்திய நிபுணர்களைத் தருவிக்கும் முயற்சியாக சுகாதார அமைச்சு அதிகாரி டாக்டர் லலித் மெண்டிஸ் இவ்வாரம் மாஸ்கோ செல்லவிருக்கிறார். (ஒ-எ)

# வரதராஜப்பெருமாள் கொழும்பு திரும்புவார்

கொழும்பு, மே 26

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் விரைவில் கொழும்பு வருவார் என்று கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

வரதராஜப் பெருமாள் மீண்டும் அரசியலில் ஈடுபடுவார் என்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் செய்திகள் வெளியாகி இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியப் படையினர் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய காலம் முதல் வரதராஜப் பெருமாள் இந்திய அரசின் பாதுகாப்பில் அங்கேயே தங்கியுள்ளார் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

# பாலர் ஆசிரியர் பயிற்சியில் சித்தி

பாலர் ஆசிரியர் சங்கம் நடத்திய பாலர் ஆசிரியர் பயிற்சி நெறியில் 19 பேர் பூரண சித்தி அடைந்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது. இப் பயிற்சி 1992 டிசம்பர் வரை நடைபெற்றதாகும். (க)


## தேவை

* தமிழ் தட்டெழுத்தாளர் - ஆண்கள்
* எழுதுவினைஞர் (கிளார்க்)

தமிழ், ஆங்கில மொழிகளில் சிறந்த அறிவும், தேர்ச்சியும் உடையவர் விரும்பத்தக்கது

28 — 05 — 1993 வெள்ளிக்கிழமை
காலை 10-00 மணிக்கு நேரில் சமூகம் தரவும்.

யாழ். வட்டச் செயலகம்,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(இராசா டீசல் என்ஜினியேர்ஸ் அருகில்)

(25815)


கொழும்பில் இரண்டு மாதமாக

# தேங்கிக் கிடக்கும் தபால்களை வாதுவவில் எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், மே 26

கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக தேங்கிக் கிடக்கும் 1,200க்கும் மேற்பட்ட வடபகுதித் தபால் பொதிகளை ''வாதுவ'' கப்பல் மூலம் இங்கு எடுத்து வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமாகாண அஞ்சல் திணைக்கள சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர் எஸ். சடாச்சரநாதன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

''வாதுவ'' கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து மாலை ஏற்றிக் கொண்டு இம்மாதம் 30ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் தற்போது தேங்கிக்கிடக்கும் தபால் பொதிகளை திருகோணமலை பிரதம தபாலகத்துக்கு அனுப்பி அங்கிருந்து ''வாதுவ'' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு எடுத்துச் செல்வதற்கான முயற்சிகளை கொழும்பில் உள்ள வடமாகாண அஞ்சல் அதிபர் மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 13ஆம் திகதியும், 24ஆம் திகதியும் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்த ''குமண'' கப்பலில் தபால் பொதிகள் எதுவும் எடுத்து வரப்படாததும்—

ஏற்கெனவே இங்கிருந்து அனுப்பப்பட்ட தபால் பொதிகளும் கொழும்பில் இறக்கப்படாமல் திரும்பி வந்ததும் தெரிந்தவையே. (இ-17)


## கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம் பெந்தேகொஸ்து செபவிழா

மே மாதம் 1993 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

நாள்தோறும்
காலை 7-00 மணி— பரிசுத்த நற்கருணை ஆராதனை
காலை 9-00 மணி—வேத வகுப்பு
காலை 10-30 மணி -சபையின் சாட்சி கருத்தரங்கு
ந. ப. 12-00 மணி—பரிந்து வேண்டல்
பி. ப. 2-30 மணி -வாலிபர் கூட்டம்
மாலை 4-00 மணி—நற்செய்திக் கூட்டம்

இந்த நாட்களில் ஆண்டவர் பலத்த காரியங்களைச் செய்வாரென்று சாத்திருப்போடு செபிக்கவும்.

பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்
அப் 1:5

யாவரும் அன்போடு அழைக்கப்படுகிறீர்கள்.

(Rev. Sevak Sam Alfred)
(சாம் அண்ணன்)

கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்,
சுன்னாகம்.

(25808)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பலசரக்கு கடைகளுக்குகந்த பாவித்த தளபாடங்கள் (அலுமாரிகள், சோக்கேஸ்வகைகள், றாக்கைகள், பட்டடைகள், மேசைகள் முதலியன) விற்பனைக்குண்டு. செ. கோபாலகிருஸ்ணன், இரும்புத் தொழிற்சாலை, சங்கானை. [25805]

பறவை வளர்க்க உகந்த 7 அடி உயரம், 6 அடி, நீளம் 4 அடி அகலம் 3 தட்டு கூடும், ஜமுனாபாறி சேலம் கலந்த ஆடும் விற்பனைக்குண்டு. நகை வேலை செய்வதற்கு பாவிக்கும் புதிய டைமெஷின் No. 01 (வீல்டைப்) விற்பனைக்கு தொடர்பு: V K. M. Farm Center, இல. 12, கனகசபை லேன், யாழ். இந்துக்கல்லூரி பின்பக்கம், யாழ்ப்பாணம். (25810)

## வேப்பம் உரம்

வேம்பு தரும் வேப்பம் உரம் மண்ணிலிருக்கும் பூச்சி, புழுக்களை அழித்து மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயன் அடையுங்கள். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (6205)

## பெயர் மாற்றம்

யாழ். நகரைவசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25587)

## இலவச திருமணசேவை

25 வயது, விசாகம், செவ்வாய் 7, அழகிய பெண்ணுக்கு பொற்தொழிலில் நாட்டம் உள்ள மணமகன் தேவை. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு தொடர்பு; ஞாயிறு காலையில். இலவச திருமணசேவை து. விமலா, நாச்சிமார் கோவிலடி, [25802]

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 11 — 03 — 1964

உதிர்வு: 27 — 04 — 1993

## திருமதி மதிவதனி தில்லைநாதன்

(ஆசிரியை - யா / வேலாயுதம் ம. வி., பலாலி - கணிதநெறி - 1991/92)

கருவாகி உருவாகித் திருவாகி - திருநாளில்
பெருவாரி இனம்வாழ்த்த மகிழ்ந்தோமம்மா!
பூவாகிப் பூப்பாகித் தோப்பாகிப் - போனாயே!
கனியீந்த கண்மணியே எங்கம்மா
விதியதனின் சதியதனில் மதிவதனி - விரைந்தாயே!
வீடெல்லாம் ஒளிபோச்சு இருளம்மா
ஆறாது மாறாது தேறாது - இங்கு
ஆறாகி விழிகொட்ட வைத்தாயம்மா!

ஆத்மா சாந்தியடைய ஈசனைப் பிரார்த்திக்கின்றோம்.


அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், உதவிகள் நல்கியும், எம்துயரைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் எம் நன்றிகள்.

நாளை 27-05-1993 காலை 9 மணிக்குத் தெணியம்பாள் கோவில் முன்றலில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் வாடும்;
அன்புக் கணவன், மழலை,
பெற்றோர், சகோதரர், சகோதரி.

163, தம்பசிட்சி வீதி,
பருத்தித்துறை. (25813)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 24 — 04 — 1917

அரனின் திருஅடியில்: 05 — 06 — 1992

## அமரர் கனகசபை கந்தையா

திதி: 26-05-1993

ஐயா!

அன்பின் ஒளிவிளக்காய், குடும்பத்தில் நிகரற்ற தலைவனாய், எமக்கு எல்லாம் நல் வழிகாட்டியாய் வாழ்ந்த நீங்கள் எப்படி ஐயா எங்களை விட்டுப் பிரிய மனம் வந்தது? நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு என்ன, ஓராயிரம் ஆண்டானாலும் எங்கள் ஒவ்வொரு மூச்சும் ஐயா! ஐயா! என்றே ஒலித்துக் கொண்டிருக்கும். எப்போதும ஜோதியாய் எங்களுடன் இருக்கிறீர்கள் என்ற அசையாத நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் உங்கள் ஆன்மாவின் பூரண சாந்திக்காக இறைவனை மன்றாடி வேண்டி நிற்கும்;

அன்புடன்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சரவணை கிழக்கு,
வேலணை. (25812)

# சடலம் அடையாளம் காணப்பட்டது

கொழும்பு, மே 26

மே தினத்தன்று கொழும்பு ஆமர் வீதியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின்போது உயிரிழந்தவர்களில் அடையாளம் காணப்படாமல் இருந்த ஒருவரது சடலம் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டது.

உயிரிழந்தவரின் உறவினர்கள் அச்சடலத்தை அடையாளம் கண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# தப்பிய ரெலோ உறுப்பினர் சரண்

சென்னை, மே 26

தமிழ்நாடு, திருச்செந்தூர் சிறையில் இருந்து தப்பிச் சென்ற ரெலோ அமைப்பு உறுப்பினர் விஜயகுமார், மாநில மறுவாழ்வு ஆணையாளர் அலுவலகத்தில் சரணடைந்தார் என்றும் —

அவரை பொலீஸார் மீண்டும் கைது செயது திருச்செந்தூர் சிறைக்குக் கொண்டு சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# 'ஏசியா வீக்' சஞ்சிகையை விற்பனைக்கு விட உத்தரவு

கொழும்பு, மே 26

படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பிரேமதாஸா பற்றிய பிரச்சினைக்குரிய கட்டுரைகளுடன் வெளியான "ஏசியா வீக்" (மே 12) சஞ்சிகையை விற்பனைக்கு விடலாம் என்று சட்டமா அதிபர் உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த சஞ்சிகையின் பிரதிகளை சுங்கத் திணைக்களம் பறிமுதல் செய்ததுடன், இச்சஞ்சிகையைத் தடைசெய்வது பற்றி சட்டமா அதிபரின் ஆலோசனையையும் அது கேட்டிருந்தது.

இதற்கிடையில் —

"ஏசியா வீக்" சஞ்சிகையில் வெளியான கட்டுரைகள் அவதூறு விளைவிக்கும் குற்றச்சாட்டுக்கு இலக்காகும் என்ற அச்சம் காரணமாக இச்சஞ்சிகையை விற்பனை செய்யலாமா என்று புத்தக வியாபாரிகள் பலர் சட்ட ஆலோசனை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]


பல பரீட்சார்த்திகள்
கேட்டுக் கொண்டதன் படி
ஜூலை 93 இல் நடைபெறவிருக்கும்

**S. L. A. S**
**பரீட்சைக்கான**

துரித பயிற்சி வகுப்புகள்
புதன், வெள்ளி நாட்களில்

**ஆரம்பம்: 28 - 05 - 1993**
3-00 மணி

பாடங்கள்: நுண்ணறிவு
இரகித்தல்
பொது அறிவு

★ பிரபல விரிவுரையாளர் குழு
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3rd Cross St., Jaffna.
(சி 4774)



**B. A. - 94**

பேராதனைப் பல்கலைக்கழகம்
(வெளிவாரி)
விரிவுரைகள் ஆரம்பம்:
05 - 06 - 1993
[சனி 12 - 00 மணி]

விபரங்களுக்கு:
எஸ். அருள்நங்கை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/4770)


# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை கப்டன் அலன்

நடனசிகாமணி பாக்கியலிங்கம்

தாயின் மடியில்: 06 — 05 — 1962

தாயக மண்ணில்: 26 — 05 — 1987

களம் பலகண்டவன் வெற்றிகள் குவித்தவன்
தளர்ந்திடா உணர்வுடன் களத்தினில் நின்றவன்
நாளைய தலைமுறை வளமுடன் வாழ்ந்திட
இன்றைய பொழுதினில் "மாவீரர்" ஆனவன்.

வ. இ. நடனசிகாமணி - இரத்தினேஸ்வரி
குடும்பத்தினர்.

வல்வெட்டித்துறை. (25779)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தமிழகம் செய்த பாவத்தின் வடிவம்!

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதில் மத்திய அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

தமது பதவிக்கு ஆபத்து வந்துவிட்டது என்பதை உணர்ந்ததும், அதனால் உண்டான மனக்கொதிப்பையும், ஆத்திரத்தையும் தீர்த்துக் கொள்ளும் விதத்திலும், முன் பழிவாங்கும் வகையிலும் செல்வி ஜெயலலிதா மத்திய அரசு மீது பலவிதமான குற்றச்சாட்டுகளையும் சுமத்தி வருகிறார்.

ஈழத்தமிழ் அகதிகளைதிருப்பி அனுப்புவதில் மத்திய அரசு மெத்தனப் போக்குடன் நடந்து கொள்கிறது என்ற குற்றச்சாட்டும் அவ்வகையினதே.

ஈழத் தமிழர்கள் தமது உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகத் தான் அவர்கள் இக்கரையில் இருந்து அக்கரை சென்றார்கள்.

ஆனால் இக்கரையில் இன்னமும் உயிர்ப்பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை. அது தெரிந்தும் அவர்களது விருப்பத்துக்கு மாறாக, அவர்கள் அச்சம் கொண்ட நிலையிலும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவது போல மத்திய அரசு ஈழத்தமிழர்களைத் திருப்பி அனுப்ப ஆரம்பித்தது. அதன் பொருட்டு அவசர அவசரமாக, வழமையாகக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளுக்கு மாறாக, மனித நேயம் இன்றிப் பலாத்காரமாக ஈழத் தமிழ் அகதிகளை அனுப்பத் தொடங்கியது. சர்வதேச நெறி முறைப் பிரகாரம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கு அறிவிக்காமலே, அதனுடன் கலந்தாலோசிக்காமலே ஸ்ரீலங்கா அரசுடன் ஓர் ஏற்பாட்டைச் செய்து கொண்டு ஈழத்தமிழர்களை காலால் உதைத்து அனுப்புகிறது!

இது மெத்தனப் போக்கா அல்லது தீவிரப் போக்கா? மத்திய அரசின், வடக்கு இந்திய ஆட்சியாளரின் தீவிரப் போக்கு தமிழகத்தின் முதலமைசருக்கு மெத்தனமாகத் தெரிகிறது! ஈழத் தமிழர் விடயத்தில் புது டில்லி மேலும் அதிதீவிரமாக நடக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்!

ஈழத்துத் தமிழர்கள் தமது இரத்தத்தின் இரத்தங்கள் என்று உரிமையும் உறவும் பாராட்டும் தமிழக மக்களின் முதலமைச்சர் எத்தகு இன உணர்வும் சகோதர பாசமும் கொண்டவர்! என்னே அவரது மனித நேயமும் கருணையும்!! இவரைத் தான் தமிழகத்தின் மூன்றாந்தர அரசியல்வாதிகள் அன்னை என்றும் கருணைத் தாய் என்றும் காலில் விழுந்து வணங்குகிறார்கள்!

அழுந்தமும், அவமானமும், ஆக்கினையும், நெருக்குதல்களும் தாங்காமல் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள ஏழாயிரம் ஈழத்தமிழரை ஐ.நா. அனுசரணையுடன் திருப்பி அனுப்ப மத்திய அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. போக்குவரத்து ஏற்பாட்டில் சிறிது தாமதம். அவ்வளவு தான். இது மெத்தனப் போக்கானால்...

தஞ்சம் கேட்டுப் போன ஈழத் தமிழர்களை மத்திய அரசு தலையை வெட்டி அனுப்ப வேண்டும் என்பதா, தமிழக முதலமைச்சரின் விருப்பம்? தமிழகம் செய்த பாவமே இப்படி ஒரு முதலமைச்சராக வடிவம் எடுத்துள்ளது.

தான் இறப்பதற்கு முன்னர் தவளை தண்ணீரில் இடந்து தொடர்ந்து கத்துவது போல ஜெயலலிதாவும் கத்துகிறார் என்று எடுத்துக்கொண்டாலும், தமிழகத்தின் இரத்த பாசமும் கருணையும் காற்றில் பறக்கிறதே...!

# குமாரியில் சீனி வரும்

தற்சமயம் கொழும்பு துறை முகத்தில் பொருள்கள் ஏற்றிக் கொண்டு நிற்கும் 'குமாரி' கப்பலில் ஆயிரம் மெற்றிக் தொன் சீனியை அனுப்பி வைக்குமாறு புனர்வாழ்வு அமைச்சை யாழ். செயலகம் கோரியிருக்கிறது.

தற்சமயம் இங்கு நிலவும் சீனித் தட்டுப்பாட்டை நீக்கவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

கடந்த மூன்று தினங்களாக 'குமாரி' கப்பலில் பொருள்கள் ஏற்றப்படுவதாகவும்—

மழை காரணமாக அப்பணி பாதிக்கப்பட்டிருப்பதாகவும்--

பெரும்பாலும் அடுத்த மாத முற்பகுதியில் 'குமாரி' பருத்தித்துறைக்கு வந்து சேரும் என என எதிர்பார்க்கப்படுவதாகவும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி நேற்று மாலை தெரிவித்தார். (உ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

'' உதயன் '' நிறுவனத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகம் நடத்தி வரும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3-00 மணி.- ஷப்றா அணி எதிர் கிறாஸ் கோப்பர்ஸ் பச்சை அணி

★ 3-45 மணி:- யாழ். பல்கலைக்கழக கூட்டு அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் இளம் அணி

★ 4-30 மணி:- யாழ். பல்கலைக்கழக நீல அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் '' ஏ '' அணி

o o o

யாழ் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை மாலை 4 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித் துறைப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

o o o

'' உதயன் '' கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடத்தி வரும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ அல்வாய் நண்பர்கள் (மஞ்சள்) அணி எதிர் நவசக்தி அணி

★ புத்தூர் எவரெஸ்ட் அணி எதிர் பருத்தித்துறை ஐ. வி. க. அணி

o o o

அரியாலை சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு — ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — நிலைய மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3-30 மணி:- நல்லூர் ஸ்புட்னிக் வி. க. '' ஏ '' அணி எதிர் அறிவொளி வி. க. அணி

★ மாலை 4-30 மணி:- நீர்வேலி ஐ. வி. க. 'ஏ' அணி எதிர் கலைவாணி வி. க. '' பி '' அணி

]உ]

# யாழ். பல்கலைக்கு 2 ஜெனரேட்டர்கள்

யாழ்ப்பாணம், மே 26

யாழ். பல்கலைக் கழகத்தின் பாவனைக்கென 72 கே. வி., 15 கே. வி வலுவுள்ள இரண்டு பெரிய ஜெனரேட்டர்கள் கொழும்பிலிருந்து இங்கு எடுத்து வரப்படவுள்ளன

அடுத்த மாத நடுப்பகுதியளவில் இந்த ஜெனரேட்டர்கள் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது பல்கலைக் கழகத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் பழுதடைந்திருப்பதால் வேலைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (த-3)

# உயர்தர முன்னோடிப் பரீட்சையில் தமிழில் கூடுதல் புள்ளி பெற்றால் பணப் பரிசு

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் விரைவில் நடத்தவுள்ள க. பொ. த. உயர்தர வகுப்புக்கான முன்னோடிப் பரீட்சையில் தமிழ் பாடத்தில் ஆகக் கூடுதல் புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

மாவட்ட மட்டத்தில் தமிழ் பாடத்தில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் மூன்று மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். அத்தோடு கோட்ட மட்டத்தில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூ 3,000, ரூ.2,000, ரூ. 1,000 பரிசில்கள் வழங்கப்படும்.

கோட்ட மட்டத்தில் முதலிடம் பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் 1,000 ரூபா பரிசில் கிடைக்கும்.

தமிழ் வளர்ச்சிக் கழகம் இந்தப் பரிசில்களை அன்பளிப்புச் செய்ய உள்ளது.

முன்னோடிப் பரீட்சைக்கு நாளை மறுதினம் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். [அ]

## யாழ். கோட்ட பாடசாலைகள் 1 மணி வரை

யாழ். கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1. 30 மணி முதல் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற இருப்பதை ஒட்டி, யாழ். கோட்டப் பாடசாலைகள் அனைத்தும் இன்று பிற்பகல் 1 மணியுடன் மூடப்படும்.

யாழ். கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கி. வேலாயுதம் இத்தகவலை வெளியிட்டார்.

மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. ந. இன்பனும் பங்குபற்றுவர். (உ)

## வடக்கின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுக்குரிய உணவு மற்றும் மருந்துப் பொருள்களை கப்பல்மூலம் அனுப்புதல், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வாகன அணி மூலம் பொருள்களை அனுப்புதல் மூன்று மாவட்டங்களிலும் உள்ள அரச அலுவலகங்களுக்கான ஒதுக்கீடுகளைச் செய்தல் ஆகிய பணிகள் கடந்த 3வாரங்களாகக் குறிப்பிடக்கூடிய அளவுக்குப் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. (அ-3)

## ஆணைக்குழு..

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

எழுத்து மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும் எதிர் வரும் 7 ஆம் திகதிவரை ஆணைக்குழு தகவல்களை ஏற்றுக் கொள்ளும்.

ஆணைக்குழு அதன் பின்னர் ஆறு வாரங்களுக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபக் கட்டடத்தில் ஆணைக்குழு இயங்கும். (உ-6)

## தீவிரவாதத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாறான தீயசக்திகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து—

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து வந்துள்ள சிலர் கொழும்பை அண்மித்துள்ள பகுதிகளில் தங்கியுள்ளார்கள் என்றும், இவர்கள் தீவிரவாதத் தொடர்புள்ளவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இவர்கள் சந்தேகத்துக்கு இடமற்ற வகையில் நடந்து கொண்டு அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வீடுகள் ஆகியவற்றில் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள்.

இத்தகைய நபர்கள் குறித்து சந்தேகம் ஏற்படுமாயின் அது பற்றி உடனடியாக பாதுகாப்பு அதிகாரிகளின் கவனத்துக்கு பொதுமக்கள் கொண்டுவர வேண்டும். இதன் மூலம் அப்பாவி மக்களின் உயிர்களைப் பாதுகாக்க உதவுவதோடு, அண்மைக் காலத்தில் இடம் பெற்ற கோரசம்பவங்கள் போன்றவை மீண்டும் தலை தூக்காமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளமுடியும்.

— இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ-6]

# வகுப்பறைகளில் அளவுக்கு அதிகமான மாணவர்கள்

## கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் உகந்தது அல்ல என்கிறார் டென்மார்க் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி

கொழும்பு, மே 26

''இலங்கையில் ஆரம்ப வகுப்புகளில் இன்று ஓர் ஆசிரியருக்கு நாற்பது தொடக்கம் ஐம்பது வரையிலான மாணவர்கள் இருக்கின்றார்கள். இது கற்பித்தலுக்கோ கற்றலுக்கோ உகந்தது அல்ல''

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அழைப்பை ஏற்று ''டன்டா'' எனும் டென்மார்க் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதியாக கொழும்பு வந்திருந்த திருமதி பியா பெடர்சன் இவ்வாறு கூறினார்.

அவருடன் திருமதி பெண் கிறேட் என்பவரும் இலங்கையிலுள்ள ஆரம்பக் கல்வி நிலை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கொழும்பில் ஒரு வார காலம் தங்கி கிராமப்புற, நகர்ப்புறப் பாடசாலைகளைச் சென்று பார்த்தார்கள்.

திருமதி பெடர்சன் மேலும் தெரிவித்ததாவது:

மாணவரின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதால் ஆசிரியர் சகல மாணவர்களினதும் தனிப்பட்ட பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கேற்பக் கற்பிப்பது கடினம். அத்துடன் பிள்ளைகள் சுதந்திரமாக அசைய, நடமாட முடியாதளவிற்கு வகுப்பறைகளில் நெருக்கமாக அமர்த்தப்பட்டுள்ளமையும் மாணவர்களின் உடல் உள வளர்ச்சிக்கு உகந்தது அல்ல.

அவர் மேலும் ''டென்மார்க்கில் ஒரு வகுப்பறையில் பதினைந்து - இருபது வரையான மாணவர்கள் மாத்திரம் கல்வி பயிலுகிறார்கள். இதன் மூலம் மாணவர்களின் தனியாற்றலைக் கவனித்து அவர்களுக்கு ஏற்றவாறு கல்வி புகட்ட சிறந்த வாய்ப்பு ஏற்படுகின்றது'' என்று கூறினார். (க)

## கண்காட்சியில் புத்தக விற்பனை கருமபீடம்

யாழ்ப்பாணம், மே 26

ஜூன் மாதம் நான்காம் திகதி தொடக்கம்மூன்று நாட்களுக்கு நடைபெற உள்ள ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம் சித்த மருத்துவக் கண்காட்சியில் புத்தக விற்பனைக் கருமபீடம் ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது வெளியீடுகளை பிரஸ்தாப கருமபீடத்தில் வைத்து விற்பனை செய்ய விரும்பும் படைப்பாளர்களும், வெளியீட்டாளர்களும் இம்மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவேண்டும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார். (அ)

## பல்கலைக்கழக அனுமதிப் படிவம்

யாழ்ப்பாணம், மே 26

இம்மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக் கழகத்தில் வைத்து வழங்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான முதலாவது படிவங்களை பெறத்தவறிய மாணவர்கள் இன்றுமுதல் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

180 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள், தமது பரீட்சைப் பெறுபேறுகள், மொத்தப்புள்ளி, தேசிய அடையாள அட்டை ஆகிய ஆவணங்களுடன் நேரடியாக சமூகமளித்து படிவங்களைப் பெறலாம் என்று பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (த)

## மோட்டார்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் ஊர்தி பதிவுச் சான்றிதழ், இறக்குமதி சிட்டை அத்தாட்சிப் பத்திரம் உள்ளவர்களும், மூல ஆவணங்கள் இல்லாதவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதை அறியத்தருகிறோம்.

அத்துடன் எமது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து வடபகுதிக்கு வெளியே சென்றுவரும் ஊர்தி உரிமையாளர்களும் இப்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் —

பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் குடும்ப அட்டையையும் தவறாது கொண்டு வருமாறும் போக்குவரத்துக் கண்காணிப் பிரிவின் மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்தி பதிவுச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை பரமசாமி

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இல 1/9 புது வீதி, கொய்யாத் தோட்டத்தை வதிவிடமாகக் கொண்டவருமாகிய வேலுப்பிள்ளை பரமசாமி 25-05-93 (நேற்று) அதிகாலை காலமாகிவிட்டார். இவர் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், கோபால பிள்ளை, பரமானந்தசிவம், இராசலிங்கம், மகாதேவன், அமிர்தலிங்கம், சனகலிங்கம், கனகநாயகம் (சவுதி அரேபியா), பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஆனந்தராசா, வசந்தராணி, அகிலாண்டேஸ்வரி, றஞ்சினிதேவி, பாலசுப்பிரமணியம், சாரதாதேவி, கமலின்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்ரனிராஜ், அனுஷா, லோசினி, யசோதினி, கலைமகள் கலைச்செல்வி, கலைக்குமரன், கலைக்கண்ணன் பகிதரன், கஜனி, கஜவதனா, மகேந்திரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25 - 05 - 1993 நேற்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றன என்பதை தெரியப்படுத்துவதுடன் அதில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
வே. ப. மகாதேவன் (மகன்)
ப. அமிர்தலிங்கம் (மகன்)

இல. 1/9 புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (2582)

## திருமதி சந்திரகுமாரி மகேசரட்ணம்

தபால் கந்தோரடி, கோப்பாய் தெற்கைச் சேர்ந்த திருமதி சந்திரகுமாரி மகேசரட்ணம் 23 - 05 - 93 அன்று காலை காலமானார் இவர் திரு. சி. மகேசரட்ணத்தின் (Canada) அன்பு மனைவியும், திரு. சி. செல்லத்துரை (பென்சனியர்], திருமதி செ. பாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியை அவர்களின் அன்பு புதல்வியும், திரு, செ. சிறிஸ்கந்தசெல்வம் (அமைப்பாளர் காப்புறுதிக்கூட்டுத்தாபனம்), திருமதி அ, குமாரசெல்வி, திருமதி சு. உருத்திரகுமாரி [ஆசிரியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), திரு. செ, விக்னகுமார் (France). திரு செ. கௌரிகுமார் (Canada), செல்வன் செ. விஷ்ணுகுமார் (Canada), செல்வி செ. பாஸ்கரகுமாரி (Cnada), ஆகியோரின் அன்புச்சகோதரியும், திருமதி சு. சிறிஸ்கந்தசெல்வம் (யாழ். செயலகம்), திரு. ந. அரியரட்ணம் (யாழ் செயலகம்)' திரு செ, சுரேந்திரகுமார் (Auto Mobile Engineer). திருமதி ச. விக்னகுமார் (France] திருமதி பா. கௌரிகுமார் (Canada) ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வி சி துஷ்யந்தி (உயர்தரமாணவி சுண்டுக்குளி மகளிர்கல்லூரி), செல்வி சி கஜேந்தி (உயர்தரமாணவி வேம்படி மகளிர்கல்லூரி), செல்வி சி. ஆரணி, செல்வன் வி. கிருஷ்ணா (France, செல்வன் கௌ. கௌசிகன் (Canada) கௌ ஜெயசிகன் (Canada), ஆகியோரின் அன்புமாமியும். செல்வன் அ. கரிகஜன், அ. கரிகேசன் (மாணவர்கள்- சென். பற்றிக்ஸ்) செல்வி அ. துவாரகா. (சுண்டிக்குழி மகளிர் கல்லூரி], செல்வி சு. மாதங்கி ஆகியோரின் அன்புச் சிறியதாயும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 23-05-93 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
சி. செல்லத்துரை (தகப்பன்).

தபாற்கந்தோரடி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (25817)

## கந்தசாமி பத்மநாதன்
(பப்பி துரை)

திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் சட்டநாதர் வீதியில் வசித்தவருமாகிய கந்தசாமி பத்மநாதன் 19-05-93 அன்று கனடாவில் (MONTREAL) காலமானார்.

அன்னார் புஷ்பராணியின் அன்புக்கணவரும், சயந்தன், சியானி, ஸ்ரீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சந்தசாமி—நேசம்மா ஆகியோரின் மகனும், விசுவநாதபிள்ளை—அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மருமகனும், கனடாவில் வசிப்பவர்களான மணியம், காலஞ்சென்ற பேபி, பாலா, பரமேஸ், விசயம், சுணேஸ், கமலநாதன், தயாளன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீஸ்கந்தராஜா (எழுதுவினைஞர், விமலேஸ்வரன் (உதவி சட்ட வரைஞர் கொழும்பு), Dr. மனோகரன் (வைத்திய அதிகாரி, கொழும்பு அரசினர் பொது வைத்தியசாலை), குணசேகரன், யோகேந்திரன் (பொறியியலாளர், தொலைத்தொடர்பு திணைக்களம் மட்டக்களப்பு). திருமதி கமலராணி ராமநாதன், திருமதி யோகராணி வாசுதேவன், செல்வராணி (கனடா), நாகநாதன் (கொழும்பு), இராமச்சந்திரன் (யாழ். மத்திய கல்லூரி)) சிவனேசன் (கொழும்பு ஆகியோரின் அன்புமைத்துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
இ. வாசுதேவன் (சகலன்)

34, (16) சட்டநாதர் றோட்,
நல்லூர். (25819)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26 – 05 – 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## வீரமரணம்

அம்பாறை மாவட்டத்தில் விநாயகபுரத்தில் கடந்த செவ்வாய் இரவு 10.40 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இம் மோதலில் வீரவேங்கை செம்மனச்செல்வன் (குங்குலியாப் பேடி குணநாயகம் - விநாயகபுரம்) வீரமரணமடைந்தார். [உ-8]

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 25

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இம் மோதலில் படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் மருது அல்லது விவாகன் (கந்தையா கைலாயநாதன் - பூநகரி) என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ-3]

## நாளை

''தாய் சேய் நலம்'' எனும் பொருள் பற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். (க)

## இன்று

யாழ். இந்துக்கல்லூரி செஞ்சிலுவை வட்டத்தின் வருடாந்த விழா இன்று பிற்பகல் 2 30 மணிக்கு நடைபெறும். செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் செயலாளர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். விழாவில் ''உயிரினங்களின் அவலக் குரல்'' என்ற நாடகமும் இடம் பெறும். (த)

o o o

யாழ்ப்பாணம், மே 26

பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் நினைவுப் பேருரை இன்று புதன் பிற்பகல் 3 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி ரங்கில் இடம் பெறும்.

'தமிழில் வழங்கும் எழுத்துப் பெயர்ப்பு முறைகள்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. இ. முருகையன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (இ)

o o o

வடமராட்சி கிழக்கில் உள்ள அகதி முகாம்கள் மற்றும் பொதுமக்கள் வாழும் பகுதிகளின் சமூக, பொருளாதார, கல்வி, சுகாதார நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக யாழ் பல்கலைக்கழக மூன்றாம் வருட வணிக முகாமைத்துவ மாணவர்கள் குழு ஒன்று இன்று அங்கு விஜயம் செய்யவுள்ளது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில், செம்பியன்பற்று, தாளையடி ஆகிய இடங்களுக்கு இக்குழு செல்லும். (த-87)

## மீன்பிடி வலை விநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் கடற்புலிகளினால் தெரிவு செய்யப்பட்ட—மாரீசன் கூடல் மீனவ சங்கத்தைச் சேர்ந்த — 15 பயனாளிகளுக்கு இன்று காலை 11 மணிக்கு மீன் பிடி வலைகள் விநியோகம் செய்யப்படும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் கடல்வள அபிவிருத்திப் பகுதி இதனை மேற்கொண்டுள்ளது. கொக்குவிலிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக முதன்மை செயலகத்திற்கு அருகில் இந் நிகழ்ச்சி இடம்பெறும். (த)

### வானொலியும் தொலைக்காட்சியும்

# ஜனாதிபதி 'புராணம்' பாடத் தேவையில்லை

## டி. பி. விஜேதுங்க உத்தரவு

கொழும்பு, மே 26

ரூபவாஹினி மற்றும் வானொலியில் அறிவிக்கப்படும் செய்தி அறிக்கையின் தலைப்புச் செய்தியில் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் பற்றிய விவரம் எப்போதும் இடம்பெற வேண்டியதில்லை.

— இவ்வாறு புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க சம்பந்தப்பட்ட இரு கூட்டுத் தாபனங்களுக்கும் அறிவித்து விட்டார்.

ஜனாதிபதி பிரேமதாஸா தமது நான்கு வருட ஆட்சிக் காலத்தில் தமது ஒவ்வொரு அசைவையும் வானொலியும் தொலைக்காட்சியும் ஒலி, ஒளி பரப்ப வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் அத்தகைய போக்கைக் கடைப்பிடிக்கத் தேவையில்லை என்று புதிய ஜனாதிபதி பணித்திருக்கிறார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலாம்பிகை குகராசன்

வேம்படி காரைநகரைப் பிறப்பிடமாக கொண்டவரும், கனடாவில் வசித்தவருமாகிய திருமதி பாலாம்பிகை குகராசன் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அகால மரணமானார். அன்னார் திரு. குகராசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற Dr. திரு, திருமதி சி. தர்மலிங்கத்தின் அன்பு மகளும், காரைநகர் மெலிஞ்சோலையைச் சேர்ந்த திரு. திருமதி மகாதேவன் - செல்வமணியின் அருமை மருமகளும், திருமதி சச்சிதானந்தம் கோமளாம்பிகை, ரவிச்சந்திரன், தவச்சந்திரன், ஞானச்சந்திரன், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராசன், மகாலட்சுமி, புஷ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வி நவமலர் கனகரத்தினம் (பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 28-05-93 வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
செல்வி நவமலர் கனகரத்தினம்

சுதுமலை மேற்கு,
சுதுமலை. (25820)

## திருமதி அன்னம்மா தியாகராசா

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அன்னம்மா தியாகராசா 20 - 05 - 93 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும், தங்கரத்தினம், நாகலிங்கத்தின் சகோதரியும், பாலபூபதி, கனகலிங்கம் (பூலோகராணி), சண்முகராசா, திருமதி பரமநாதன் (கிளி), காலஞ்சென்றவர்களான ஜீவமணி, யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கோண்டாவில் சுருட்டுத்தொழில் அதிபர் இராஜசுந்தரம், காலஞ்சென்ற மாணிக்கம், மகாலக்சுமியின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23 - 05 - 93 கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
இராஜசுந்தரம் மகேந்திரன்
(பெறாமகன்)

(25821)

## தம்பையாபிள்ளை குணரெத்தினம்
(ஓய்வுபெற்ற சுகாதாரத் திணைக்கள தொலைபேசி-இயக்குநர்)

நயினாதீவைச் சேர்ந்த திரு. தம்பையாபிள்ளை குணரெத்தினம் (25 5-93) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் தம்பையாபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருகரும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், ஈஸ்வரி, பரமேஸ்வரி, லலிதாம்பாள் (ஆசிரியர், கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), முரளீதரன் B.Sc (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிரவேலு, நல்லதம்பி (சுவிஸ்), நாகேஸ்வரன் (சவுதி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், கார்த்திகேசு, அமிர்தலிங்கம், சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசாமி, கனகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), இராசம்மா (ஆசிரியை தாவடி இ. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவானி, கர்மாட்சிசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர்), அப்பாத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகலனும், ஜெயசீலன் (லண்டன்), சுமதி, அரவிந்தன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), சுதமதி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), புராதனி ஆகியோரின் ஆசைப் பேரனுமாவர்.

அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பரமேஸ்வரி நல்லதம்பி
லலிதாம்பாள் நாகேஸ்வரன்

அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (25826)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org